# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1960/58 - 2016 මාර්තු මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.03.31

1960/58 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MO/KTG/LND/03/AQSTN/2012/02.

காணி அமை இலக்கம்:4/3/2/2012/எ எஸ்/316.

யால தேசிய வனச் சரணாலயத்திலுள்ள தனியார் காணியை எடுத்துக் கொள்வதற்கு அவசியமெனவும், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணியை பெற்றுக் கொள்வத்ற்காக அரசாங்கம் அபிப்பிராயம் தெரிவித்துள்ளதுடன், காணி எடுத்தல் சட்டத்தின் 7 வது பிரிவின் (1) உப பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணத்தின் மொனராகலை மாவட்டத்தில் கதிர்காமம் பிரதேச செயலாளர் பிரிவில் கதிர்காமம் எனும் கிராமத்தில் அமைந்துள்ள மொனராகலை நில அளவையாளரினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பூ.அ.வ. 25, பத்திர இல. P3/31, 32, 39, 40 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகள்.

**1. துண்டு இல. 1A**

காணியின் பெயர்: கும்புருகெலே; உரிமை கோருவோர்: ருகுனு மஹா கதிர்காம தேவாலயம், கதிர்காமம்; விஸ்தீரணம்: 179.7566 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 1B**

காணியின் பெயர்: கும்புருகெலே; உரிமை கோருவோர்: ருகுனு மஹா கதிர்காம தேவாலயம், கதிர்காமம்; விஸ்தீரணம்: 24.0991 ஹெக்டயார்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு உரிமை கூறுபவர்கள் அல்லது வேறு வகையில் தொடர்பு கூறும் அனைவரும் தாமாக அல்லது பிறறொருவரின் எழுத்தாவணங்களினால் அதிகாரம் பெற்றுள்ளவர்களும் 2016, மே 25 ஆம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு கதிர்காமம் பிரதேச செயலாளர் காரியாலயத்தில் என்னைச் சந்திக்க வேண்டும்.

மேலும், 2016, மே மாதம் 18 திகதிக்கு முன்னதாக அக்காணி சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரின் உரிமைகளின் தன்மைகளையும் அக்காணிக்கு நஷ்டஈடு பெற விண்ணப் பிப்பதற்கான காரணங்கள் அடங்கிய விபரங்களுடன் நஷ்ட ஈட்டுத் தொகை மற்றும் அத்தொகையை கணக்கிட்ட முறையையும் இரண்டு பிரதிகளுடன் எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

எஸ். சீ. வீரகோண்,
பிரதேச செயலாளர்,
கதிர்காமம்.

பிரதேச செயலகம்,
கதிர்காமம்,
2016, மாச்சு 28.

4 - 677


இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.